அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 01/2014 (I)

எனது இல : PSC/EST/07-07/01/2014
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல 177, நாவலை வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.

2015 ஏப்ரல் மாதம் ….. ஆம் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்.

<u>அரசாங்க சேவையில் “செயலூக்கமிக்க சேவைக் காலம்” தொடர்பான பொருள்கோடல்</u>

அரசாங்க சேவையுடன் தொடர்புற்ற செயலூக்கமிக்க சேவைக் காலம் என்பதன் பொருள்கோடல் பின்வருமாறு அமைய வேண்டுமென 2015.03.31 ஆம் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**“ செயலூக்கமிக்க சேவைக் காலம் என்பது தனது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்ற நிலையில் உண்மையாகவே கடமையில் ஈடுபட்டிருந்த சேவைக் காலத்தைக் குறிக்கும். செயலூக்கமிக்க காலப்பகுதியாக கருதப்பட வேண்டுமென அமைச்சரவையினால் கொள்கை அடிப்படையில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற லீவுக்காலம் தவிர்ந்த ஏனைய அனைத்து சம்பளமற்ற லீவுக் காலப்பகுதிகளும் செயலூக்கமிக்க காலப்பகுதிக்காக கணக்கிடப்படமாட்டாது”**

அவ்வாறே 2014.01.28 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை: 02/2014 இத்தால் திருத்தஞ்செய்யப்படுகிறது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

ரி.எம்.எல்.சி.சேனாரத்ன

செயலாளர்

அரசாங்க சேவை ஆணைக்குழு

பிரதிகள் : பிரதம அமைச்சரின் செயலாளர்

அமைச்சரவை செயலாளர்

தாபனப் பணிப்பாளர் நாயகம்